**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி:17.09.2022

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககத்தின் உன்னத் பாரத் அபியான் 2.0**

இந்திய அரசின் கல்வி அமைச்சகத்தின் திட்டமான உன்னத் பாரத் அபியான் 2.0 (UBA 2.0) தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் மார்ச் 2019 முதல் செயல்பட்டு வருகிறது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வணிக மேம்பாட்டு இயக்ககம் இத்திட்டத்தின் தமிழ்நாட்டின் மத்திய மண்டல ஒருங்கிணைப்பு நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. இத்திட்டத்தில் பதிவு செய்யப்பட்ட கல்லூரிகளுக்கான புத்தாக்க மற்றும் ஒருங்கிணைப்பு பயிற்சி 12.09.2022 அன்று அண்ணா அரங்கம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகத்தில் நடத்தப்பட்டது. வேளாண் வணிக மேம்பாட்டு இயக்குனர் மற்றும் மண்டல பிராந்திய ஒருங்கிணைப்பாளர் முனைவர் திரு. வ.ஏ. சோமசுந்தரம் வரவேற்புரை வழங்கினார்.

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் முனைவர். வெ. கீதாலட்சுமி அவர்கள் உன்னத் பாரத் அபியான் திட்டத்தின் புத்தாக்க மற்றும் ஒருங்கிணைப்பு பயிற்ச்சியை தொடங்கிவைத்து "உயர்கல்வி நிறுவனங்களால் கிராமபுற வளர்ச்சி" என்ற தலைப்பில் சிறப்புரை வழங்கனார். மேலும், " உன்னத் பாரத் அபியான் கிராமபுற வளர்ச்சிக்கான தொழில்நுட்பங்கள்" என்ற தொகுப்பு புத்தகத்தையும் வேளாண்மை பல்கலைக்கழக துணைவேந்தர் வெளியிட்டு குழுக்களாக ஒருங்கிணைவதின் அவசியத்தை எடுத்துறைத்தார். மேலும், கிராமபுற மேம்பாட்டிற்காக விவசாயத்தில் சிறந்த வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கு தனியார் மற்றும் பொது நிறுவனங்களின் கூட்டுமுயற்சியின் தேவையையும் அவர் வலியுறுத்தினார்.

திண்டுக்கல் காந்திகிராமம் பல்கலைகழகத்தின் பேராசிரியர் மற்றும் தெற்கு மண்டல பிராந்திய ஒருங்கிணைப்பாளர் உன்னத் பாரத் அபியான முனைவர் திரு. மு. இரவிச்சந்திரன் அவர்கள், கோவை அண்ணா பல்கலைக்கழக துணை பேராசிரியர் முனைவர்

திரு. சு. பாலமுருகன் அவர்கள் மற்றும் தேசிய ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத் ராஜ் இணைபேராசிரியர் திரு. சு. இரமேஷ் அவர்கள் உன்னத் பாரத் அபியானின் பதிவு, கிராமங்களை தேர்வு செய்தல், ஊரக வளர்ச்சி திட்டங்கள் மற்றும் ஒப்புதல் பெறுவது குறித்து விளக்கம் அளித்தனர். வேளாண் வணிக மேம்பாட்டு இயக்ககத்தின் உதவி பேராசிரியர் மற்றும் மண்டல பிராந்திய இணை ஒருங்கினைப்பாளர் முனைவர் திரு. இரா. பாலாஜி அவர்கள் உன்னத் பாரத் அபியானின் நிதயுதவி மற்றும் தனியார் நிதயுதவியின் கோறுவதின் முக்கியத்துவத்தை விளக்கி கூட்டத்தில் பங்கேற்ற 120 கல்லூரிகளின் ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் அனைத்து பங்கேற்பாளர்களுக்கும் நன்றியுரை வழங்கினார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**